ஒலி) அதற்குத் தேவையான கட்டடங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன் அடிப்படையில், அந்தக் கட்டடம் தற்காலிகக் கட்டடமாக இருந்தால், நிரந்தரக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கும், அந்தப் பகுதி தூரமாக இருந்தால், மக்கள் எளிதாக அணுகுகின்ற வகையில் தொகுதியிலே அமைப்பது குறித்தும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

98—

சுற்றுலாத் தலம்

***43439—திரு. பி.வி. பாரதி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொடியம்பாளையம் கடற்கரைத் தீவு கிராமத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள், சீர்காழி தொகுதி, கொடியம்பாளையம் கடற்கரைத் தீவு கிராமத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா என்று வினவியிருக்கின்றார்கள். சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. இருப்பினும், அத்தலத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அதனடிப்படையில் அந்தப் பகுதிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் அணுகு சாலைகளைச் செவ்வனே ஏற்படுத்தி, செய்து வருகின்றது. அந்த வகையிலே, நாகப்பட்டினம் மாவட்டம், கொடியம்பாளையம், சீர்காழியிலிருந்து 36 கிலோ மீட்டர் தொலைவில் வங்காள

2019 ஜூலை 12]

விரிகுடா கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது. சுற்றிலும் கடல் நீரால் சூழப்பட்டு அமைந்துள்ள இப்பகுதிக்கு கொடியம்பாளையத்திற்கு அருகிலுள்ள ஊர்களிலிருந்தும், சீர்காழி மற்றும் சிதம்பரம் ஆகிய ஊர்களிலிருந்தும் உள்ளூர் பொதுமக்கள் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இங்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக அடிப்படை வசதிகளான குடிநீர், மின் விளக்கு, கழிப்பிட வசதி, சுற்றுலாப் பயணிகள் ஓய்வுக் கூடம், சிறுவர் பூங்கா முதலிய வசதிகள் ஏதேனும் தேவைப்படும்பட்சத்தில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை மற்றும் கருத்துருவினைப் பெற்று சுற்றுலாத் துறையின்மூலம் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

முற்பகல் 10–55

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு வணங்கி, நாங்கள் வணங்குகின்ற தெய்வம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலே அம்மாவிற்குப் பின்னால் நாங்கள் இருக்கிறோம் என்று கழகத்தையும், ஆட்சியையும் கட்டிக்காத்து வருகின்ற, கோரிக்கை வைக்கின்ற நேரத்திலே அதைக் கேட்டு முடிப்பதற்குள் ‘முடியும், முடியாது’ என்று சொல்கின்ற ஆற்றல்மிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய சீர்காழி தொகுதியில் 3 பக்கங்கள் ஆறும், ஒரு பக்கம் கடலும் அமைந்துள்ள அழகான தீவு கிராமம், கொடியம்பாளையம். 2004 ஆம் ஆண்டில் சுனாமி ஏற்பட்ட போதுகூட, கொடியம்பாளையம் தீவு கிராமம் ஒரு சிறிதளவுகூட பாதிக்கப்படாத எழிலார்ந்த தீவு உள்ள கடற்கரை கிராமம் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

பக்கத்தில் இருக்கின்ற கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் அண்ணன் சட்டமன்ற உறுப்பினர் பகுதியில் பிச்சாவரத்தில் ஒரு

சுற்றுலாத் தலம் இருக்கிறது. மிக அருகில் இருக்கின்ற பூம்புகார் தொகுதியில், பூம்புகார் கடற்கரை சார்ந்த ஒரு சுற்றுலாத் தலம் இருக்கிறது. எங்கள் மக்கள் பொழுதுபோக்குவதற்கு, hectic–ஆன தங்கள் வாழ்க்கையில் கொஞ்சம் relax செய்துகொள்வதற்கு அல்லது சுற்றுலாத் துறையை வளர்ச்சி பெறச் செய்வதற்கு கொடியம்பாளையம் தீவு ஓர் அருமையான கிராமம். துறை அதிகாரிகள் மற்றும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் அந்த கிராமத்தை வந்து பார்த்தால், அதன் அழகை உணர முடியும். குடிநீருக்கு உகந்த நிலத்தடி நீர் அங்கு இருக்கிறது. அது ஒரு அழகான தீவு கிராமம். சுற்றுலாத் தலமாக்க வேண்டும் என்பது எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. 80 hectare பரப்பளவு கொண்ட கிராமம். ஏறத்தாழ 25 hectare. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 hectare தனியாருக்குச் சொந்தமான இடமும் அங்கு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை சுற்றுலாத் தலமாக மேம்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியிலிருந்து 36 கி.மீ. தொலைவில் வங்காள விரிகுடா கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள கொடியம்பாளையம் பகுதி, கடல் நீரால் சூழப்பட்ட உப்பங்கழியாக அமைந்திருக்கிறது. கொடியம்பாளையத்திலிருந்து தெற்கே சுமார் 4 கி.மீ. தொலைவில் பழையாறு, புதுப்பட்டினம் வரை அமைந்துள்ள உப்பங்கழியில் கடல் நீர் நிரம்பி சுமார் 3 அடி முதல் 5 அடி வரை ஆழம் உள்ளதாக அமைந்துள்ளது. கொடியம்பாளையத்திலிருந்து வடக்கே சுமார் 6 கி.மீ. தொலைவில், பிச்சாவரம் வரை அமைந்துள்ள உப்பங்கழியில், கடல்நீர் சுமார் 2 அடி முதல் 3 அடி வரை ஆழம் உள்ளதாக அமைந்துள்ளது. இந்தப் பகுதியை சுற்றுலாத் தலமாகவும், உல்லாச படகு சவாரி நடத்துவதற்குண்டான*

சாத்தியக்கூறுகளையும் கண்டறிந்து, தொடர்புடைய வனத் துறை, பொதுப் பணித் துறை நிருவாகம், உள்ளாட்சி நிருவாகம், வட்டார வளர்ச்சி அலுவலர், கொள்ளிட பகுதி அதிகாரிகள் உள்ளிட்ட துறையினருடன் கலந்தாலோசனை செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரைக்கும்பட்சத்தில், அங்கே அனைத்து சுற்றுலாப் பயணிகளும் கண்டுகளிக்கின்றவகையில், படகு குழாம் உட்பட அனைத்தும் செய்து தருவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடியம்பாளையம் தீவு கிராமத்திற்கு மேற்குப் பகுதியில் கொள்ளிடம் ஆற்றில் கோட்டைமேடு என்ற தீவு கிராமம் இருக்கிறது. அங்கு இப்போது மக்கள் வசிக்கவில்லை. கொடியம்பாளையம் தீவு கிராமத்திற்கும், கோட்டைமேட்டிற்கும் படகு போக்குவரத்து செய்யக்கூடிய ஓர் அருமையான நிலை இருக்கிறது.*

[*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை*]

அதை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலனை செய்து, கொடியம்பாளையத்தை சுற்றுலாத் தலமாக அமைப்பதற்கு மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மீண்டும் வேண்டி கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஆய்வு செய்து, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2019 ஜூலை 12

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தினுடைய வருமானத்தை ஈட்டுகின்ற இரண்டாவது துறையாக சுற்றுலாத் துறை இருக்கிறது. அதுவும் என்னுடைய கூடலூர் சட்டப் பேரவைத் தொகுதிக்கு கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலிருந்து அதிகமான எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அதனால் சுற்றுலாத் துறைக்கு வருமானமும் அதிகமாக வருகிறது. எனவே, கூடலூர் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட நாடுகாணி என்ற இடத்தில் Gene Pool பூங்காவில் 2,000 ஏக்கர் நிலமும், பொன்னாரில் இருக்கின்ற Horticulture farm–ல் கிட்டத்தட்ட 200 ஏக்கர் நிலமும் இருக்கிறது. அந்த 200 ஏக்கர் நிலத்தில் வாசனைத் திரவியப் பூங்கா ஒன்று இருக்கிறது. அங்கே ஒரு boat house வசதியை ஏற்படுத்திக் கொடுத்து, அந்த வாசனைத் திரவியப் பூங்காவை மேம்படுத்தினால் சுற்றுலா வசதி பெருகும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடலூர் தொகுதியில் நாடுகாணியில் இருக்கின்ற Gene Pool பூங்கா மற்றும் பொன்னாரில் இருக்கின்ற Horticulture farm–ல் உள்ள வாசனைத் திரவியப் பூங்காவை மேம்படுத்தி சுற்றுலா வளர்ச்சிக்கு வழி செய்தால் அங்கு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு, அரசுக்கு வருமானமும் பெருகும். மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். ஆகவே இதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறைமூலம் செய்வார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலுள்ள அந்தப் பகுதியை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜூலை 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.*

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற உன்னத கோட்பாட்டுடன் தமிழகத்தை இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக வழிநடத்திய நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தமிழகத்தை சீரோடும், சிறப்போடும் இன்றைக்கு வழிநடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களாகிய தங்களுக்கும் என் இனிய காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

எனது தொகுதிக்குட்பட்ட அவல்பூந்துறை என்ற இடத்தில் உள்ள 200 ஏக்கர் பரப்பளவு கொண்ட குளத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2015 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறைமூலம் படகு குழாம் அமைப்பதற்கு ரூபாய் 1 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப கட்டப் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகியுள்ளன. அந்தக் குளத்தை முழுமையாக சுற்றுலாத் துறைக்கு பயன்படும்விதமாக மாற்றுவதற்கு 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, சுற்றுலாத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டிலே அந்தத் தொகையைப் பெற்றுத்தர வேண்டும். அந்தச் சுற்றுலாத் தலம் சிறப்பாக அமையக் காரணம், அது ஈரோடு நகருக்கு மிக அருகில் சுமார் 9 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. ஈரோடு மாநகர மக்களுக்கு அது சிறந்த சுற்றுலாத் தலமாக அமையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, அதற்கு இந்த நிதியாண்டில் நிதியை ஒதுக்கிக் கொடுக்குமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஈரோடு பகுதிக்கு அருகில் உள்ள அந்தக் குளத்தில் ஏற்கெனவே படகு குழாம் அமைப்பதற்காக சுற்றுலாத் துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்கிற தகவலை இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

99—

பேருந்து வசதி

***22216—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சுழி தொகுதி, காரியாபட்டி ஊராட்சி ஒன்றியம், சோலைக்கவுண்டன்பட்டி, கெப்பிலிங்கம்பட்டி மற்றும் அழகியநல்லூர் ஆகிய கிராமங்களுக்குக் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விருதுநகரிலிருந்து சோலைக்கவுண்டன்பட்டி, கெப்பிலிங்கம்பட்டி, அழகியநல்லூர், மாந்தோப்பு வழியாக காரியாபட்டிக்கு 15 நடைகளும், விருதுநகரிலிருந்து அழகியநல்லூர் விலக்கு, அழகியநல்லூர், மாந்தோப்பு வழியாக காரியாபட்டிக்கு 3 நடைகளும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், விருதுநகரிலிருந்து கோரிக்கை கிராமங்களான சோலைக்கவுண்டன்பட்டி, கெப்பிலிங்கம்பட்டி மற்றும் அழகியநல்லூர் ஆகிய கிராமங்களுக்கு தனித்தனியே நேரடி பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, இப்பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்